மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு. M. ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., LLM.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 05–ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இடைக்கால மனுஎண்.8/2026 ல் அசல் வழக்கு எண்.55/2024
**CNR.No.TNTT-08-000061-2024**

ஜெயக்கொடி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1.முத்துராஜ்
2.ஜெபராஜ்
3.கோயில்ராஜ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஜெகநாதன் ஜெபராஜா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் செய்து கொண்ட வாத உரைகளை கேட்டறிந்தும், மனு சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று (05.06.2026)இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

வாதவுரைக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டுள்ள அசல் வழக்கில் பி.சா.1 ஐ திரும்ப அழைத்து மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனு சுருக்கம்.**

அ) அசல் வழக்கு எண்.55/2024 வாத உரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும் போது வழக்கிற்கு மிக முக்கியமான வா.சா.ஆ.2 ஆவணத்தின் தன்மை பொறுத்தும் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் பொறுத்தும் சில முக்கியமான கேள்விகள் கேட்க



HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.06.05 17:00:05 +0530

வேண்டியுள்ளதால் பி.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே,பி.சா.1 ஐ திரும்ப அழைத்து மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை சுருக்கம்:–**

அ)மனு சங்கதிகள் குறிப்பிடப்பட்டு பொய்யானவை என்று மறுக்கப்பட்டுள்ளன. அசல் வழக்கில் பி.சா.1 மனுதாரர் தரப்பில் 25.03.2026 ல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு 02.04.2026 ல் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி விசாரணை முடித்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் மனுதாரர் தரப்பு வாதவுரைக்காக 09.04.2026, 18.04.2026 மற்றும் 28.04.2026 தேதிகளில் வாய்தா வாங்கிவிட்டு 28.04.2026 ல் இம்மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. பி.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும் வழக்கிற்கு தேவையான கேள்விகள் அனைத்தும் கேட்கப்பட்டுள்ளன. பி.சா.1 யிடம் முக்கிய கேள்விகள் கேட்கப்படாமல் விடுபட்டுள்ளதாக உறுதிக் கூற்றில் சொல்லப்படவில்லை.

ஆ)வழக்கினை காலதாமதம் படுத்தும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யத்தக்கது. பி.சா.1 யிடம் வா.சா.ஆ.3 பற்றிய கேள்விகள் விடுபட்டிருந்தால் எதிர்மனுதாரர்கள் தரப்பு வேறு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டிருந்த போதே இம்மனுவினை தாக்கல் செய்திருக்கலாம். மனுதாரர் தரப்பு குறைபாட்டை நிரப்புவதற்காக வழக்கு விசாரணையை மறு திறவு செய்ய அனுமதிக்க முடியாது என்பது சட்டவிதியாகும். எனவே, இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:**

பி.சா.1 ஐ திரும்ப அழைத்து மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய ஒரு வாய்ப்பளிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா? இல்லையா? என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

**தீர்வு.**

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.05 17:00:10 +0530

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி. எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் ஆவர். அசல் வழக்கானது, மனுதாரரால் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வெள்ளமடம் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.55/2, சர்வே எண்.9/4 ஆகியவற்றில் அமைந்துள்ள 36.42 செண்ட் விஸ்தீரணம் கொண்ட 1ம் தபசில் சொத்தில் மனுதாரருக்குரிய ½ பாகத்தினை பிரித்துத் தர பாகப்பிரிவினை பரிகாரம் வேண்டியும், நத்தம் சர்வே எண்.565/35ல் 1.06 செண்ட் விஸ்தீரணத்தில் அமைந்துள்ள 2ம் தபசில் சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்வதன் தொடர்ச்சியாக மனுதாரரின் அனுபவத்தினை இடையூறு செய்யக் கூடாது என்று விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வேண்டியும், 2ம் தபசில் சொத்திலிருந்து 2ம் எதிர்மனுதாரரை வெளியேற்று சுவாதீனம் ஒப்படைக்க சுவாதீன மீட்புப் பரிகாரம் வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.அசல் வழக்கில் கடந்த 30.07.2025ம் தேதி எழுவினாக்கள் வனையப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் 02.02.2026ம் தேதி வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 6 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு 09.02.2026ம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். 16.02.2026ம் தேதி கருப்பசாமி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு 03.03.2026ம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டு வாதி தரப்பு சாட்சியம் 10.03.2026ம் தேதி முடிக்கப்பட்டுள்ளது. 18.03.2026ம் தேதி 2ம் எதிர்மனுதாரர் பி.சா.1ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு 25.03.2026ம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் 02.04.2026ல் முடிக்கப்பட்டுள்ளது.

7.இதனையடுத்து 09.04.2026ம் தேதி குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டு கேட்பின் பேரில் 18.04.2026ம் தேதிக்கு இறுதியாக ஒத்தி வைக்கப்பட்டது. அன்றையதினம் மனுதாரர் தரப்பில் வாத உரை நிகழ்த்த கால அவகாசம் வேண்டி இடைநிலை மனு எண்.6/2026 தாக்கல் செய்ததன் பேரில் 28.04.2026ம் தேதிக்கு வாய்தா போடப்பட்டது. இந்நிலையில், இம்மனுவானது



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.05 17:00:12 +0530

பி.சா.1 யிடம் வா.சா.ஆ.3 குறித்து சில கேள்விகள் விடுபட்டுவிட்டதாகவும், வழக்கில் கேட்டுள்ள பரிகாரங்கள் குறித்து சில முக்கிய கேள்விகள் கேட்க வேண்டி பி.சா.1 ஐ திரும்ப அழைக்க வேண்டும் என்று உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8.மனுதாரர் குறிப்பிடும் வா.சா.ஆ.3 நத்தம் புல எண்.565/35 க்குரிய நத்தம் நிலவரித் திட்ட துூய சிட்டா ஆகும். மேற்படி ஆவணம் ஏரல் தலைமையிடத்து துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்டு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனை பொறுத்து பி.சா.1 யிடம் கேள்வி கேட்க வேண்டியுள்ளதாக கூறுவது ஏற்கும்படி இல்லை. மேலும், என்ன வகையான கேள்வி கேட்க வேண்டியுள்ளது என்பது குறித்து எந்த தெளிவும் இல்லை. வழக்கில் கேட்டுள்ள பரிகாரங்கள் பொறுத்து எதிர்மனுதாரரிடம் முக்கிய கேள்விகள் விடுபட்டுள்ளது என்று கூறுவது எந்தவிதத்திலும் ஏற்புடையதல்ல. மனுஉறுதிக் கூற்றில் தமிழில் வா.சா.ஆ.2 குறித்து கேள்வி கேட்க வேண்டியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 1ம் தபசில் சொத்துக்குரிய கணினி பட்டா எண்கள்.1472 மற்றும் 1184 ஆகும். மேற்படி ஆவணம் குறித்து பி.சா.1 யிடம் எந்த கேள்வியும் கேட்க வேண்டி இருப்பதாக இந்நீதிமன்றம் கருதவில்லை.

9.பி.சா.1 ஐ முழுமையாக குறுக்கு விசாரணை செய்த பிறகு வாத உரை நிகழ்த்த 2 முறை வாய்தாக்கள் பெற்ற பின்னர் பி.சா.1 ஐ திரும்ப அழைத்து மீண்டும் கேள்வி கேட்க உள்ளதாக சொல்லியுள்ள சங்கதி இம்மனுவினை அனுமதிப்பதற்கு போதுமானதாகவும், ஏற்புடையதாகவும், திருப்தியளிப்பதாகவும் இல்லை. மனுதாரர் தரப்பில் விடுபட்டு போனவைகளை நிவர்த்தி செய்வதற்காகவும், அசல் வழக்கினை காலதாமதம்படுத்தும் நோக்கிலும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுவதால் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்று தீர்மானிக்கிறது.

10. **முடிவாக,**

**இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.05 17:00:17 +0530

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 05–ஆம் நாள் என்னால் இவ்வவையறியப் பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.05 17:00:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் – இல்லை –

மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் – இல்லை –

எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் –இல்லை–

எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் – இல்லை –

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.05 17:00:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.